# 2

# தேவனைக் குறித்து கிறிஸ்தவர்கள் விசுவாசிப்பது என்ன

படைப்புகளின் அண்ட சராசரங்கள் அனைத்திலும் குறிப்பிடத்தக்க உண்மையே தேவன் இருக்கிறார் என்பதுதான். *கிறிஸ்தவர்கள் தேவனை விசுவாசிக்கிறார்கள்!* தேவனிடத்தில் விசுவாசமில்லாமல் ஒருவர் திருமறையை விசுவாசிக்க இயலாது. புத்தகத்தின் மையமே அவர்தான். திருமறை அவரைக் கொண்டே துவக்கம் பெறுகிறது: "ஆதியிலே, தேவன் ... சிருஷ்டித்தார்." பிறகு அவரது வரலாறை அது சொல்லுகிறது - அல்லது குறைந்த பட்சம் மனித வர்க்கத்துடன் அவரது செயல்பாடுகளின் வரலாற்றைக் கூறுகிறது. திருமறையை விசுவாசிப்பது என்பது தேவனை விசுவாசிப்பதாகும்.

யார் இந்த தேவன்? அவர் எப்படியிருப்பார்? நாற்பது ஆண்டுகளுக்கு முன் குறிப்பிட்ட சில இறையியல் நபர்கள் "தேவனின் மரணம்" என்று ஒரு அறிவிப்பை வெளியிட்டனர். இந்த நடப்புகளைக் குறித்து டைம் எனும் பத்திரிக்கை[1] அதன் அட்டையில் மூன்று வார்த்தைகளை அச்சிட்டிருந்தது: "தேவன் மரித்து விட்டாரா?" தேவனைக்குறித்த அநேகருடைய கருத்துக்களை அந்தக்கட்டுரை உள்ளடக்கியிருந்தது:

> ஒரு தெய்வத்தை நடைமுறைப்படுத்துவோருக்கு, ஆகாயத்துக் காற்றிலிருந்து கண்ணிற்குப் புலப்படாத அங்கே காணுகிற "சில சக்திகள்" மற்றும் வான மண்டலங்களின் அப்பாற்பட்ட சக்திகள் வரை எல்லாமே அவர்தான் என்ற கொள்கையைக் கொண்டுள்ளனர். வாஷிங்டனைச் சேர்ந்த ஒரு இளம் விஞ்ஞானி "தேவன், என்று ஒருவர் இருப்பாரேயானால், அது ஒரு நீரக வாயுவாகவோ (ஹைட்ரஜன்) மற்றும் கனிமமாகவோ (கார்பன்) இருக்க வேண்டும் ..." என்று ஆலோசனையாகக் குறிப்பிட்டார், டெல் அவிவ் எனுமிடத்து வழிப் போக்கன் ஒருவர், "தேவன் ஒருநாள் என்னை இந்த அசிங்கத்திலிருந்து விடுதலை கொடுப்பார்." அவர் இரக்கமுள்ள தேவன், "வெண் உடை தரித்து, தங்க சிங்காசனத்தில் வீற்றிருப்பவருமாயிருக்கிறார்" என்று சொன்னார். டட்ச் நாட்டைச் சேர்ந்த ஒரு பணிப்பெண் கூறும் பொழுது: "தேவன் ஆகாயத்தில் உலாவிக் கொண்டிருக்கிற ஒரு ஆவி" என்று குறிப்பிட்டாள். திரை எழுத்தர் எட்வர்ட் அன்ஹால்ட் (பெக்கெட்) குறிப்பிடுகையில் "தேவன் ஒரு மழலைப்பருவத்து கற்பனையாக இருக்கிறார். மின்னல் என்பதை அறிந்துகொள்ள இயலாத மனிதனுக்கு இது அவசியமானதாக இருக்கிறது ..." என்று குறிப்பிட்டார். ஒரு கிரேக்க வாயிற்காவலர் "தேவன் ஒரு தீப்பிழம்பு போன்றும், உங்கள் கண்களை

குருடாக்கத்தக்க வெண்மையுமாயிருக்கிறார்,'' என்று நினைக்கிறார். ரோமகுருமார்களில் ஒருவர், "தேவன் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு எல்லாமுமாக இருக்கிறார்'' என்றார். பாஸ்டன் விஞ்ஞானி ஒருவர் தேவனைக் குறித்து விளக்கமளித்து, "அண்ட சராசரங்களின் ஒட்டுமொத்த இணக்கமே அவர்'' என்று விளக்கம் அளிக்கிறார். நாடகங்களை எழுதும் ஆல்ஃபிரட் தமது ஆழ்ந்த சிந்தையோடு கூட: "அசிரீரியாய் ஒலிக்கும் சத்தத்தில், 'அது போதியளவு நன்மையைக் காணவில்லை' - அதுவே தேவன்'' என்கிறார்.

தத்துவ ஞானிகளும் இறையியல் நிபுணர்களும் மனிதனுடைய வித்தியாசப்பட்ட தெய்வ நம்பிக்கைகளை வகைப்படுத்த முயற்சித்து கீழ்வரும் பெயர்களில் கொடுத்துள்ளனர்:

*ஒரு தெய்வ நம்பிக்கை* - ஒரு தேவனில் நம்பிக்கை மற்ற அனைத்தையும் தவிர்த்தல், கிறிஸ்தவர்கள், மூஸ்லீம்கள், யூதர்கள் ஆகியோர் ஒரு தெய்வ நம்பிக்கையுடையோர்.

*தெய்வத் தொகுப்பு நம்பிக்கைகள்* - ஒரே தெய்வ நம்பிக்கை கொண்டாலும் மற்ற தேவர்கள் இருப்பதற்கான சாத்தியங்களை தவிர்க்காதவர்கள்.

*பல தெய்வ நம்பிக்கை* - பல தெய்வங்களில் நம்பிக்கை வைப்பவர்கள்.

*இயற்கையையும் இணைத்துக் காணும் தெய்வ நம்பிக்கை* - எல்லாமே தேவனுடைய அங்கம், தேவன் எல்லாவற்றிலும் இருக்கிறார் என்கிற நம்பிக்கை.

*இயற்கை சமயம்* - தேவன் உலகத்தை சிருஷ்டித்தார் என்றும் இப்பொழுது ஒட்டு மொத்தமாக விலகியிருக்கிறார் எனும் நம்பிக்கை.[2]

*இரு வேறுபாடுகளை ஒன்றெனக் கொள்ளும் நம்பிக்கை* - படைப்புத் தொகுப்பில் காணும் எதிரும் புதிருமான நன்மை தீமை இரண்டும் சமநிலையானது எனும் நம்பிக்கை.

*இறை நம்பிக்கையின்மை (நாத்திகக் கோட்பாடு)* - தேவன் இருப்பதை மறுப்பது; தேவன் இல்லை எனும் கண்ணோட்டம்.

*நடுநிலை நம்பிக்கை* - தேவன் இருக்கிறாரா அல்லது இல்லையா என ஒருவர் அறிய முடியாது என்கிற கண்ணோட்டம் உடையவர்.

*இயற்பொருள் வாதம்* - கண்ணில் காணும் பொருள்கள் மட்டுமே கொண்ட அண்டத்தில் நம்பிக்கை.

தேவனைக் குறித்து உண்மை என்ன? திருமறை என்ன சொல்லுகிறது? தேவனுடைய சில குணாதிசயங்களையும் இன்றைய கிறிஸ்தவர்களுக்கு அவற்றில் காணும் தனிச்சிறப்புகளையும் காண்போம்.

## தேவன் இருக்கிறார்

தேவன் இருக்கிறார். தேவன் இருக்கிறார் என்பதே எல்லாவற்றிற்கும் அடிப்படை உண்மை, மற்ற எல்லாவற்றிலும் வைத்துள்ள அடிப்படை விசுவாசமே இதுதான். திருமறை, ஒருவகையில், தேவன் இருக்கிறார் என்று நிரூபிக்க எந்த ஒரு விதிமுறையையும் முன்வைக்கவில்லை.[3] தேவன்

இருப்பதை உண்மையென ஏற்று தேவன் எனும் பதத்துடன் துவங்குகிறது (ஆதியாகமம் 1:1). எப்படியாயினும், திருமறை, அவர் இருக்கிறார் என்பதையும் அவரது மகிமையையும் குறிப்பிடுகிறது. சங்கீதக்காரன் வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது என்று சொன்னார் (சங்கீதம் 19:1). தேவன் ''நன்மை செய்து வந்து,'' ''வானத்திருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து,'' இவ்விதமாய் அவர் ''தம்மைக் குறித்துச் சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை'' என்று பவுல் சொன்னார் (நடபடிகள் 14:17). மேலும் பவுல் தேவன் இருக்கிறார் சிருஷ்டிப்பு என்று சாட்சி கொடுக்கின்றன, அவர் இருப்பதை மறுப்பவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை என்றும் குறிப்பிட்டார் (ரோமர் 1:18-25). உண்மையில், தேவன் இருக்கிறார் என்ற சத்தியத்தின் சாட்சியத்தை கண்டும் ''தேவன் இல்லை'' என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்கிறான் (சங்கீதம் 14:1) என்று திருமறை கூறுகிறது.

தேவன் இருப்பது உண்மையென்பது அவர் பிரியப்படுகிற வாழ்க்கையை வாழ நமக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். பிரச்சனை என்னவெனில் விசுவாசிப்பதாகக் கூறும் அநேகர் தேவன் இல்லாதது போலவே வாழ்கின்றனர்! அவர்கள் - கோட்பாட்டின்படியல்ல, செயலில் - நாத்தியவாதிகளாயிருக்கின்றனர். அப்படிப்பட்டவர்களுடைய விசுவாசம் பயனற்றது (யாக்கோபு 2:20; தீத்து 1:16 யும் காண்க).

## தேவன் ஆவியாயிருக்கிறார்

இயேசு சொன்னார், ''தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்'' (யோவான் 4:24). தேவன் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரல்ல என்ற பொருளில் அவர் கூறுகிறார். தேவன் ஆவிக்குரிய நபர்த்துவமுடையவராக இருப்பதால், மாமிசக் கண்களால் அவரைக் காண இயலாது (யோவான் 1:18; 6:46; 1 தீமோத்தேயு 1:17).[4] தேவன் என்ன நிறத்தில் இருக்கிறார்? அவரது உயரம் என்ன? அவர் வெள்ளை முடியும் நீண்ட தாடியும் கொண்ட ஒரு வயதான மனிதரா? அவர் பேசும் மொழி என்ன? இப்படிப்பட்ட கேள்விகளுக்கு ஒருபோதும் பதில் காண இயலாது. தேவன் மாமிசத்துக்குரியவராயிராமல், ஆவிக்குரியவராயிருப்பதால், மனிதர்களை பார்ப்பதுபோல் தேவனைப் பார்ப்பது இயலாத காரியம்.

## தேவன் எங்கும் இருக்கிறார்; அவர் சர்வ வியாபி

வேத வசனங்கள் தேவன் எங்கும் வியாபித்து இருப்பதாகப் போதிக்கிறது. சங்கீதக்காரன் கேட்கிறார், ''உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்?'' இப்படி அவர் எங்கே போனாலும் அங்கே அவர் இருக்கிறார் என்று சொல்லி முடிக்கிறார் (சங்கீதம் 139:7-10). தேவன் ''நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்'' என்று பவுல் சொன்னார் (நடபடிகள் 17:27, 28; எரேமியா 23:23, 24).

சில வேளைகளில் மனிதர்கள் தேவனை விட்டு மறைவாகப் போய் விடலாம் என்று நினைக்கிறார்கள். அவர்கள், ''நான் வேறொரு பட்டணத்தில்

இருக்கிறேன், என்னைச் சுற்றிலும் என் நண்பர்கள் இல்லை, என்னுடைய சபை அங்கத்தினர்களிலும் ஒருவர் கூட அருகில் இல்லை - எனவே நான் விரும்புகிற எதை வேண்டுமானாலும் நான் செய்து கொள்ளலாம். யாருக்கும் தெரியப்போவதில்லை" என்று நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட விவாதத்தில் என்ன தவறு இருக்கிறது என்றால், வேறு யாரும் பக்கத்தில் இராமல் போனாலும், தேவன் அங்கே இருக்கிறார்! அவரை விட்டு நாம் எங்கேயும் போய் விட முடியாது!

## தேவன் எல்லா - வல்லமையும் உடையவர்; சர்வ வல்லவர்

இயேசு சொன்னார், "தேவனாலே எல்லாம் கூடும்" (மத்தேயு 19:26; மற்றும் லூக்கா 1:37; எபேசியர் 3:20; எரேமியா 32:17; மத்தேயு 3:9 ஆகியவைகளையும் காண்க). தேவன் எங்கும் இருக்கிறது போலவே, அவர் எதையும் செய்ய முடியும்.[5] தேவனே "சர்வ வல்லவராயிருக்கிறார்" (2 கொரிந்தியர் 6:18; வெளிப்படுத்தின விசேஷம் 1:8), என்பது அவர் சகல வல்லமையையும், சகல அதிகாரமுமுடையவராயிருக்கிறார் என்று சுட்டிக் காட்டுகிறது.

அவரது போதனைகளை கண்டுகொள்ளாமல் விடுகிறபோதும், அவருடைய கட்டளைக்கு புறமுதுகு காட்டுகிற போதும், அல்லது அவருக்கு நாம் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறபோதும் தேவன் சகல - வல்லமையுள்ளவர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அகில அண்டசராசரங்களையும் உண்டாக்கின அவர் தம்மை அவமதிப்பவர்களை நிச்சயமாக தண்டிப்பதற்கு வல்லமை பெற்றிருக்கிறார்.

## தேவன் சகலத்தையும் - அறிந்தவர்; சர்வ ஞானி

தேவன் "பூரண ஞானமுள்ளவர்" (யோபு 37:16), அவர் "சகலத்தையும் அறிந்தவருமாயிருக்கிறார்" (1 யோவான் 3:20). எபிரெயர் 4:13ல், "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" என்று கூறப்பட்டிருக்கிறது. (ஏசாயா 46:9, 10; மத்தேயு 6:8; 10:30; சங்கீதம் 139.) இயேசு பூமியில் வாழ்ந்தபோது தேவனுடைய ஞானத்தை வெளிப்படுத்தினார், அதினால் மனிதனுக்குள் இருப்பதை அவர் அறிவார் (யோவான் 2:25). உண்மையில், இயேசு அடிக்கடி அற்புதங்களை நடப்பித்து ஞானத்தை வெளிப்படுத்தினார்.

நாம் நமது செயல்களை மற்ற மக்களிடமிருந்து வேண்டுமானால் மறைந்துவிடலாம், ஆனால் நாம் தேவனிடத்திலிருந்து எதையும் மறைக்க இயலாது. நாம் என்ன செய்கிறோம் என்பது அவருக்குத் தெரியும், "அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும்" அனைத்துக் கிரியைகளையும் நியாயத்தீர்ப்பில் கொண்டு வந்து நிறுத்துவார் (பிரசங்கி 12:14)!

## தேவன் நல்லவராயிருக்கிறார்

தேவன் நல்லவராயிருக்கிறார் எனும் கருத்து பல வகையிலும் வெளிப்படுத்தப் படுகிறது. திருமறை சொல்லுகிறதாவது,

*தேவன் அன்பாயிருக்கிறார் (1 யோவான் 4:8).*

*தமது ஒரே பேறான குமாரனைத் தந்தருளி, தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16).*

*நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது (1 யோவான் 4:10).*

*நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்தவரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவிடத்திலிருந்து இறங்கி வருகிறது (யாக்கோபு 1:17).*

*"தேவனுடைய தயவையும் ... பார்" என்று பவுல் வியந்ததில் ஆச்சரியமில்லை (ரோமர் 11:22). "தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே" என்று இயேசு அறிவித்தார் (லூக்கா 18:19). "அவர் இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும் சத்தியமுமுள்ள தேவன்" என்பதிலே தேவனுடைய நற்குணத்துக்கு சான்றளிக்கப்படுகிறது (யாத்திராகமம் 34:6; மற்றும் சங்கீதம் 100:5; 106:1; 107:1; 34:8 ஆகியவற்றையும் காண்க).*

*தேவனுடைய தயவுக்கு முன்பாக நமது பிரதிகிரியை எப்படியிருக்க வேண்டும்? அவர் ஆவியாயிருக்கிறபடியால் நாம் சரீரக் காரியங்களிலே அவரை நினைக்கக் கூடாது அல்லது மனித உருவில் அவரை நினைக்கக் கூடாது. அவர் சர்வ வல்லவராயிருக்கிறபடியால், நாம் அவருக்குக் கீழ்ப்படியாமல் போனால் எவ்வித பிரதி விளைவும் ஏற்படப் போகிறதில்லை என்று நாம் நினைக்கக் கூடாது. அவர் சகல - ஞானத்தையும் உடையவரானபடியால், அவருடைய அறிவுக்கப்பால் நாம் எதுவும் செய்யமுடியாது என்று உணர வேண்டும். அவர் நற்குணமுடையவராயிருப்பதால், நாம் அவரைத் துதிக்கும் துதியோடே அவருக்கு முன்பாக முழங்கால் படியிட்டு, ஸ்தோத்திரம் செலுத்தி, வழிபட வேண்டும். நாம் அவரைப் பின்பற்றி சந்தோஷமாய் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்!*

## தேவன் பரிசுத்தராயிருக்கிறார்

*தேவன் முற்றிலும் - பரிசுத்தமுள்ளவராயிருக்கிறார்; அவர் ஒட்டுமொத்த பரிசுத்தமுள்ளவர்! "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" என்று அவர் சொன்னார் (லேவியராகமம் 19:2; 1 பேதுரு 1:15, 16யும் காண்க). தேவன் "இஸ்ரவேலின் பரிசுத்தர்" என்றும் அழைக்கப்பட்டார் (சங்கீதம் 71:22; 78:41; 89:18; ஏசாயா 1:4). தீர்க்கதரிசி ஏசாயா தேவாலயத்தில் நடந்த தேவனுடைய ஒரு காட்சியைத் தரிசனமாகக் கண்டார்; அதன் வலியுறுத்துதலில், "சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்பதே (ஏசாயா 6:3). சங்கீதக்காரன் வியப்புற்று, "நம்முடைய தேவனாகிய கர்த்தர் பரிசுத்தமுள்ளவர்" என்றான் (சங்கீதம் 99:9).*

*தேவன் அன்புமிகுந்தவரும், நல்லவரும் இரக்கத்தோடே நம்மிடத்தில் காரியங்களை நடப்பித்தாலும், நம்முடைய மாமிசம் விரும்புகிற சகலத்தையும் அவர் கொடுப்பதில்லை; நமது பாவங்களை அவர் மேலோட்டமாகப்*

பார்ப்பதுமில்லை - ஏனெனில் அவர் முற்றிலும் பரிசுத்தராயிருக்கிறார்! தேவன் அன்புள்ளவராயிருக்கிறது போல, அவர் பரிசுத்தமுள்ளவராயிருக்கிறார் என்பதையும் மனதில் வைத்துக் கொள்வோமாக.

## தேவன் நீதியுள்ளவராயிருக்கிறார்

மோசே கர்த்தரைக் குறித்து சொன்னது "அவர் கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன், அவர் நீதியும் செம்மையுமானவர்" (உபாகமம் 32:4). ஏசாயா, "கர்த்தராகிய நான் அல்லவோ? நீதிபரரும்[6] இரட்சகருமாகிய என்னையல்லாமல் வேறே தேவன் இல்லை; என்னைத்தவிர வேறொருவரும் இல்லை" என்று எழுதினார் (ஏசாயா 45:21).

> தேவனுடைய நியாயத்தினால் (அல்லது நீதியினால்), ஜனங்களின் தகுதிக்கேற்ப அவர்களை நடத்துவது அவருக்கு அவசியமானது. இப்படியாக, பாவத்தைத் தண்டிப்பது தேவனுக்கு அவசியமானது, அதற்கு பிரதிபலன் பெறத்தகுதியில்லை; அது தவறானது; தண்டனைக்குரியது.[7]

தீமை வெற்றி கொள்வது போல சில வேளைகளில் காணப்பட்டாலும், தேவன் நீதியுள்ளவர் என்ற உண்மையானது நன்மை தன் பிரதிபலனை அடைவதையும் தீமை தண்டிக்கப்படுவதையும் முற்றிலும் தேவன் உறுதிப் படுத்துவார்.

## தேவன் கடுமையானவரும் கோபாக்கினையுள்ளவருமாவார்

தேவன் நற்குணம் உள்ளவர், அன்புள்ளவர் என்று மட்டும் திருமறை போதிக்காமல், தேவன் கடுமையானவர் என்றும் போதிக்கிறது - அதாவது அவர் கோபாக்கினையைச் செலுத்துகிறவரும் எரிச்சலுமுள்ள தேவன். "தேவனுடைய ... கண்டிப்பையும் பார்" (ரோமர் 11:22). தேவன் தாமே தம்மைக் குறித்து "எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்" என்றார் (யாத்திராகமம் 20:5). ஆகையால் புதிய ஏற்பாடு சொல்லுகிறது, "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (எபிரெயர் 10:31).

சில நேரங்களில், "நல்லவரும் அன்புமிகுந்தவருமாகிய தேவன் நித்திய நகரத்திற்கான ஆக்கினையை எப்படிச் செலுத்த முடியும்?" என்று நாம் ஆச்சரியப்படலாம். நாம் - பாவம் நிறைந்தவர்களாகிய நாம் கூட - நம்முடைய சத்துருக்களை அப்படி நடத்துவதில்லையே.

தேவனுடைய இயல்பான சுபாவத்தை நாம் மறந்துவிடக்கூடாது. தேவன் நல்லவரும் அன்புமிக்கவரும் மட்டுமல்ல, அவர் பரிசுத்தமும் நீதியும் நிறைந்தவரும்கூட. அவர் பரிசுத்தராயிருப்பதினால் தீமையை அவரால் சகித்துக் கொள்ள இயலாது. அவர் அனைத்து உலகிலும் நீதியுள்ள ஆளுகையைச் செய்கிறபடியால், தீமையை அவர் தண்டித்தே ஆகவேண்டும். ஆகையால், அவர் கோபாக்கினையின் தேவனுமாயிருக்கிறார், அவர் - தீமையையும் தீமை செய்கிறவர்களையும் தண்டிக்கிறவர் - தண்டித்தே ஆக வேண்டும்.

மனித நிலையில் தேவனுடைய கோபாக்கினையை ஒப்பிட இயலாது. நமது குழந்தைகளை தண்டிப்பதற்கு தேவனுடைய கோபாக்கினையை ஒப்பிடலாமா? தேவனும் தமது பிள்ளைகளை சிட்சிக்கிறார் (எபிரெயர் 12:3-11), ஆகிலும் அவரது சிட்சை கோபாக்கினையை ஒத்ததல்ல. தேவனுடைய கோபாக்கினை என்பது மனந்திரும்ப மறுத்து கலகம் செய்கிற ஜனங்கள் மீது வருவது. தெய்வீகக் கோபாக்கினையை மிக மோசமான குற்றவாளிகளான கொலைகாரன் போன்றவர்களை தண்டிக்கும் செயலோடு ஒப்பிடலாமா? ஒரு கொலையாளிக்கு மனித சட்டத்தின்படி கொடூரமான தண்டனை மரணம். அவன் சமுதாயத்துக்கு விரோதமாக பாவஞ் செய்கிறான். சமுதாயம் அவனை சிறைவைக்கவோ அல்லது அவனுடைய வாழ்க்கையை முடிக்கவோ உரிமை பெற்றுள்ளது - குற்றத்தின் அளவுக்குத்தக்க தண்டனையின் அளவு. ஆகிலும், சர்வ வல்லவரும் மட்டுப்படுத்த கூடாதவருமாகிய தேவனுக்கு எதிராக ஒரு பாவி பாவஞ் செய்வதால், நித்திய நகரமாகிய மட்டுப்படுத்த இயலாத தண்டனைக்கு அவன் பாத்திரனாகிறான்!

## தேவன் மாறாதவர்

தேவன் ஒருவரே (உபாகமம் 6:4). அவர் அநாதியாய் என்றென்றைக்கும் இருக்கிறார் (சங்கீதம் 41:13; 90:2); "அவரிடத்தில் யாதொரு மாறுதலும் வேற்றுமையின் நிழலுமில்லை" (யாக்கோபு 1:17). இயேசு கிறிஸ்துவைப் போலவே, அவரும் "நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" (எபிரெயர் 13:8). அவரே "அல்பாவும் ஓமேகாவும்," ஆதியும் அந்தமுமாய் இருக்கிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 1:8).[8] தேவன் மாறுவதில்லை (மல்கியா 3:6; மற்றும் சங்கீதம் 102:25-27யும் காண்க).

ஆதலால், தனது பாவங்களுக்குத்தக்கதாக தேவன் தன்னை ஒன்றும் செய்ய மாட்டார் என்று எண்ணுகிறவன், தேவன் கடந்த காலங்களில் என்ன செய்தார் என்பதையும், எதிர்காலத்தில் என்ன செய்யப் போவதாக வாக்குத்தத்தம் செய்துள்ளார் என்பதையும் வாசிக்க வேண்டும். இஸ்ரவேலர் தொடர்ந்து தங்கள் பாவத்தில் நிலைத்திருக்க தேவன் அனுமதிக்கவில்லை; தேவனுடைய பொறுமை முடிவுக்கு வந்தது, இஸ்ரவேலர் அழிக்கப்பட்டனர். தேவன் எப்போதும் மாறாதவராயிருக்கிற படியால், நம்முடைய பாவங்களையும் என்றென்றும் காணாது விட்டுவிட மாட்டார் என்பதில் நாம் நிச்சயமாயிருக்க முடியும். நாம் நம்முடைய மனந்திரும்பாத நிலையில் தொடர்ந்து நிலைத்திருப்போமானால் தேவனுடைய பொறுமை முடிவுக்கு வந்துவிடும் மற்றும் நாம் அழிக்கப்படுவோம்.

## முடிவுரை

தேவனைப் பற்றி நீங்கள் விசுவாசிப்பது என்ன? "தேவன் எப்படிப்பட்டவராயிருக்கிறார் என்று நான் புரிந்து கொள்ள முடியவில்லை" என்று நீங்கள் நினைப்பவராயிருக்கலாம். இப்படி நீங்கள் உணரக் கூடியவராயிருந்தால், நீங்கள் ஒருவர் மட்டுமல்ல, மனித வர்க்கத்தில் எவருமே அவரை முழுமையாய் தேவனை முழுமையாய் அறிந்தவரில்லை. ஆகிலும் அவருக்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட அவரைப் பற்றிய எல்லாவற்றையும் அறிந்திருக்க வேண்டுவதில்லை. ஒரு தொலைக்காட்சிப்பெட்டியில் அதின் அறிவிப்புக் குறி எப்படிக் கடத்தப் படுகிறது

என்று எனக்குத் தெரியாது; ஆனாலும் நான் தொலைக்காட்சிப் பெட்டியைத் திறந்து அதன் விளைவுகளை பார்த்து ரசிக்க முடியும். ஒரு எக்ஸ் - ரே கருவி எப்படி வேலை செய்கிறது என்று எனக்கு எந்த ஒரு ஞானமுமில்லை, ஆகிலும் டாக்டருடைய ஆலோசனைப்படி எனக்கு எக்ஸ் - ரே தேவைப்படுமாகில் நான் எடுக்க மறுக்க முடியாது. காலங் காலமாக, “ஒரு கருப்புப் பசு புல்லை மேய்ந்து, வெள்ளையாகப் பாலைக் கொடுப்பது எப்படி?” என்ற கேள்வி கேட்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. இதற்கான பதில் எனக்குத் தெரியாது, ஆகிலும் பாலை நான் குடிக்கிறேன். அதே போல ஒரு சிறிய கருப்பு தற்பூசணி விதை மண்ணில் நடப்பட்டு பச்சை நிற மேல் தோலும் சிவப்பு நிற உணவைக் கொடுப்பது அது நூற்றுக்கணக்கான கருப்பு விதைகளைக் கொடுக்கிறது எப்படி நடக்கிறது என்று என்னால் விளக்கிச் சொல்லத் தெரியாது - நான் தற்பூசணியை விரும்பி சாப்பிடுகிறேன். தங்கள் ஒரு நன்மையை அனுபவிக்க ஜனங்கள் அது குறித்து எல்லாவற்றையும் புரிந்து கொண்டு பயனடைவதில்லை.

தேவனைக் குறித்தும் அப்படியே எல்லாவற்றையும் அறிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதையும் அவர் உங்களை நேசிக்கிறார், நீங்கள் இரட்சிக்கப்பட விரும்புகிறார் என்பதையும் ஏற்றுக்கொள்வது அவசியம் (2 பேதுரு 3:9), அதே வேளையில் அவர் உங்கள் பாவங்களை வெறுக்கிறார், ஒரு நாளில் அந்தப் பாவங்களுக்காக நீங்கள் கணக்குக் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதையும் ஏற்கத்தான் வேண்டும். மேலும், நீங்கள் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெறும் பொருட்டு கிறிஸ்துவை மரிக்கும்படி அனுப்பி முன்னேற்பாடு செய்தார் - அந்த மன்னிப்பைப் பெற நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும் சொல்லியிருக்கிறார்.

இந்த உண்மைகளை தெரிந்து கொள்வது மட்டும் போதுமானதல்ல. தேவனை நீங்கள் விசுவாசித்து, திருமறை அவரைக் குறித்து சொல்லுகிறவைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் (எபிரெயர் 11:6); பிறகு, நீங்கள் இரட்சிக்கப்பட, அந்த விசுவாசத்துக்குரிய கிரியை நடப்பித்து அவரது கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

---

குறிப்புகள்

[1]“தேவன் மரித்து விட்டாரா?” டைம் 87 (8 ஏப்ரல் 1966): 83. [2]மூலாதார மெய்ம்மை, அறியும் தன்மைக்கு அப்பாற்பட்டது “transcendence.” எனும் கோட்பாடு தேவன் தமது படைப்பின் அனைத்துப் பொருட்களுக்கும் அப்பாற்பட்டவரென்றும், தனித்திருப்பவர் என்றும் கருத்து தெரிவிக்கிறது. தேவன் அடிப்படைக் கொள்கையாக அண்டம் முழுவதும் பரவியிருக்கிறார் எனும் கருத்து “immanence.” திருமறையோ தேவன் மேற்குறிப்பிட்ட இரண்டு கருத்துக்களும் உடையவராக, படைப்புகளுக்கு அப்பாற்பட்டும் தமது படைப்புகளுக்குட்பட்டும் இருக்கிறார் என்று போதிக்கிறது. டெஸிட்ஸ் தேவன் படைப்புகளுக்கு அப்பாற்பட்டிருக்கும் கருத்தை வலியுறுத்துகிறார் ஆனால் அவர் படைப்புகளுக்குட்பட்டிருப்பதை மறுக்கிறார். [3]தேவன் இருக்கிறார் என்பதற்கான ஆதாரங்கள் கொடுக்கப்பட முடியும். அது திறந்த மனதுடைய நபர்களை தேவன் ஒருவர் இருக்கிறார் என உணர்வடையச் செய்யும். [4]தேவன் அதரிசனமான ஆவியாய் இருக்கிற படியால், தேவனைக் “கண்டவர்கள்” (யாத்திராகமம் 24:11-ன் படி) தேவனளித்த சாட்சியத்தையே கண்டார்கள் - தேவன் இருக்கிற விதமாகக் காணவில்லை. [5]தேவன்

*சில காரியங்களை செய்ய முடியாது என்று திருமறை வெளிப்படுத்துகிறது. உதாரணமாக, தேவன் தீமையினால் சோதிக்கப்பட முடியாது (யாக்கோபு 1:13), "தேவனால் பொய் சொல்ல முடியாது" (எபிரெயர் 6:18). அப்படிப்பட்ட வசனப்பகுதிகளோடே தேவன் எல்லாவற்றையும் செய்ய வல்லவராயிருக்கிறார், என்பதை ஒப்புரவாக்கிப் பார்த்தால், நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியது (1) தேவன் தாம் செய்யும்படி எதைத் தெரிந்து கொண்டாலும் செயல்படுத்துவார் மற்றும் (2) தமது இயல்புக்குப் பொருத்தமான எதையும் செய்ய அவரால் முடியும். தேவன் பரிசுத்தரும் நல்லவருமாயிருக்கிறபடியால், அவர் பொய் சொல்ல மாட்டார், அவருடைய இயல்புக்கு பொய் ஒத்துப் போகாது.* [6]*"நீதியும்" "நியாயமும்" ஒரே பொருளில் மொழிபெயர்க்கப்படும் வார்த்தைகள் - பழைய ஏற்பாட்டு எபிரெய வார்த்தை டிசாட்டிக் என்றும் புதிய ஏற்பாட்டு கிரேக்க வார்த்தை டைகாயஸ் என்றும் கூறப்படுகிறது. ஆகையால், தேவன் "நீதியுள்ளவர்," என்று சொல்லப்படுவதால் அவர் "நியாயமுள்ளவர்" என்றும் நினைக்கப்பட வேண்டும்.* [7]வெயின் க்ரூடம், "தேவனுடன் தொடர்புடைய குணாதிசயங்கள்," *முறைபடுத்தப்பட்ட இறையியல்* (கிரேண்ட் ரேபிட்ஸ், மிச்சிகன், ஸோண்டர்வான் வெளியீட்டு இல்லம், *1994), 204.* [8]கிரேக்கில் "alpha" (*a*) என்பது முதல் வார்த்தையும் "omega" (*ō*) என்பது கடைசி வார்த்தையும், "the Alpha and the Omega" *என்றால் "முதலும் கடைசியுமாக" அல்லது "தொடக்கமும் முடிவும்" என்று அர்த்தம்.*